1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டாறு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மூன்று கிராமங்களை தனியாக பிரித்து வடிகால் வெட்டப்பட்டதால் போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே பாலத்தை அவசியம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது வகைப்படுத்தபடாத முன்னுரிமை பெறாத சாலை. இதற்கு 15 இலட்சம் செலவாகும். என்று கூறப்பட்டுள்ளது. இது பரிசீலனை செய்த போது, பணம் போதாத காரணத்தால் பிற சாலைகள் என்பதிலே எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, வடிகால் வெட்டப்பட்டதாலே அந்த கிராமங்கள் தனி தீவாக இருக்கின்றன. அங்கே இருக்கிற மக்கள் படகிலே சென்று வரவேண்டிய சூழ்நிலை இருப்பதால் விசேஷ கவனம் எடுத்து பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அரசு விசேஷ கவனம் எடுத்து செயல்படுத்தும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோபி நகராட்சி பேருந்து நிலையம்.

*வினா எண். 313—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி நகராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையத்தில் நாளொன்றுக்கு 250 பஸ்களுக்கு மேலாக வந்து செல்கின்றன. அங்கு 10 பஸ்களுக்கு மேல் நிற்க முடியவில்லை. அதன் காரணமாக அங்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தால், இதை அரசு உடனடியாக மீண்டும் பரிசீலனை செய்து, வேறு இடத்திற்காவது மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் எல்லா பஸ் ஸ்டாண்டுகளுமே சீராக இல்லாத காரணத்தால், இதற்கென்று தனியாக கார்ப்பரேஷன் ஒன்று அமைத்து நிவர்த்தி செய்ய அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போன்று உத்தேசம் அரசுக்கு இல்லை.

பாம்பாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 314—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள A. K. மோட்டூர் என்னுமிடத்தில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) அரவங்கோட்டை மோட்டூர் சாலையில் கி.மீ. 5/2-இல் பாம்பாற்றின் குறுக்கே ரூ. 5·50 இலட்சம் செலவில் உயர்மட்ட பாலம் அமைக்க 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்பாலம் 13—1-81 இல் முழுமையாக முடிக்கப்பட்டு வாகனப்போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்து.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS